**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் கம்பனி - 2023**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் கம்பனியின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும்

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புதகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்படலாகாத போதிலும் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,726,701 மீதி ஏனைய கடன்கொடுத்தோர்களுக்கு செலுத்த வேண்டிய மீதியிலிருந்து கழித்து காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் அத்தொகையால குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய சரிசெய்தல்களை அடுத்துவரும் ஆண்டின் போது மேற்கொண்டு சமர்ப்பிக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் நியாயப் பெறுமதியானது அது கொண்டுள்ள பெறுமதியின் விகிதசமமாகமாற்றமடைகையில் மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் மீள்மதிப்பு பெறுமதி ரூபா 74,370,330 ஆன காணியும் கட்டிடங்களும் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் | முன்னைய ஆண்டில் காட்டப்பட்டுள்ளவாறு 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருட்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்ட போதிலும் நிலையான | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பின்னர் கம்பனியால் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை வகைப்படுத்துவதிலான பொருத்தமின்மையின் காரணமாக மீள்மதிப்பின் மூலம் வழங்கப்பட்டிருந்த மீள்மதிப்பு இலாபம் மற்றும் நட்டத்தினை இறுதிக் கணக்கினூடாக செம்மையாக்க முடியாதிருந்தது. | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டித் தொகையானது கணக்காய்வில் கணிப்பீடு செய்ததற்கு இணங்க ரூபா 25,510,888 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 26,350,281 ஆக கணக்கீடு செய்ததன் காரணமாக ஆண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 839,393 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாக ரூபா 26,350,281 பதியப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி கணக்காய்வு ஐய வினாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வட்டி வருமான பெறுமதியுடன் பொருந்தியிருக்காததனால் பதில் வழங்குவதற்கு தெளிவு இல்லை. | ஆண்டிற்கான வட்டி வருமானத்தையும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தையும் சரியாக கணிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்றில் மிகையூதியச் செலவுகள் மற்றும் ஆண்டின் போது கொடுப்பனவுகள் முறையே ரூபா 1,217,447 மற்றும் ரூபா 864,784 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி முறையே ரூபா 1,871,845 மற்றும் ரூபா 470,194 ஆக அடையாளங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 259,808 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்து இதனுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது காசாகப் பெற்ற முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 34,775,891 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 53,815.263 ஆக அடையாளங்காணப்பட்டதன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 19,039,372 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்து இதனுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது வரிச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது ரூபா 2,838,980 நிறுத்திவைத்தல் வரியினை கழித்ததன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் மற்றும் செலுத்த வேண்டிய வரி அத்தொகையால் | சரிசெய்து இதனுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | ஆண்டிற்கான வரிச் செலவுகளை சரியாக கணித்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே அதிகரித்தும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | கம்பனியின் நிதி நிலைமை கூற்றில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,492,589 ஆக இருந்த போதிலும் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 4,645,285 காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 847,304 வித்தியாசம் காணப்பட்டது. | 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 211,225 தொகையான காப்புறுதி தவணைப்பணம் தற்பொழுது அறிவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 11,392 மீதி தொடர்பான உறுதிப்படுத்தலினைப் பெற்று உரிய மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனங்களுக்கிடையேயான மீதியை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இடர்பாடுகளுக்கு உள்ளாகிய புலம்பெயர்ந்தவர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது இலாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட ரூபா 1,858,941 மீதியை ஒதுக்காக காட்டுவதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | இடர்பாடுகளுக்கு உள்ளாகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்குச் செலுத்துவதற்குச் சமமான ஒரு நிதி ஏற்பாட்டினை இலாபத்திலிருந்து ஒரு சதவீதமாக செலுத்த வேண்டிய மீதிக்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் ரூபா 1,858,941 மீதியினை வருமானத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுப் பிழையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டுவரும் கிடைக்க வேண்டிய நிறுத்திவைத்தல் வரி மற்றும் பெறுமதி சேர் வரி முறையே ரூபா 1,118,392 மற்றும் ரூபா 1,340,622 ஆக மொத்தமாக ரூபா 2,459,014 மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி ரூபா 1,340,622 மீதி மாத்திரம் மிகுதியாக உள்ளது. | இம்மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தொழிலாளர்கள் வெளிநாடு செல்கின்ற வெளிநாட்டு கம்பனிகளிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 6,453,985 மீதியில் (Invoice receivable) 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,770,670 மீதி காணப்பட்டதுடன் அப்பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை வருமானத்திற்கு அல்லது செலவுகளுக்கு எதிரீடுசெய்வது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இப்பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டின் போது தென் கொரியாவிற்கு தொழிலுக்காகச் சென்ற புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து மீளச் செலுத்தும் அடிப்படையில் அறவிடப்படுகின்ற மொத்தமாக ரூபா 15,265,000 பிணை வைப்புக்கள் 15 ஆண்டுகளை கடந்திருந்த போதிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிக்கூற்றுக்களில் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,088,891 செலுத்த வேண்டிய மீதியும் காணப்பட்டது. | 03 ஆண்டுகளை பூரணப்படுத்தி நாட்டிற்கு வருகை தந்து எங்கள் நிறுவனத்திற்கு அதனை உறுதிப்படுத்திய அனைத்து நபர்களுக்கும் தற்பொழுது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து வைப்பாளர்களுக்கும் வேண்டிக் கொண்டதன் பின்னர் அப்பணத்தை செலுத்துதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. | செலுத்த வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்புகள் | | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின்** | | | | |
| | (i) | 40(i) ஆம் பிரிவு | கம்பனி தொடங்கியதிலிருந்து அறிக்கைத் திகதி வரையும் உள்ளக கணக்காய்வு பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவராண்மை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாதிருந்ததுடன் தற்பொழுது வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 41(2)(எ) ஆம் பிரிவு | நிருவாக சபையினால் தமக்கு உதவியளிக்கும் வகையில் கணக்காய்வு மற்றும் | 19 நபர்கள் மாத்திரம் இருக்கின்ற எங்கள் நிறுவனம் மிகவும் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமைத்துவ குழு தோற்றுவிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிறிய பிரிவு என்பதனால் அவ்வாறான ஒன்றினை மேற்கொள்ளும் போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படும் | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 384 மற்றும் 384(3) | கம்பனியினால் காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதல் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் சரிசெய்தல்களும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 151,154,029 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 37,547,493 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 113,606,536 ஆல் ஒரு முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஆட்சேர்ப்பு வருமானம் ஏனைய வருமானம் மற்றும் நிதிசார் வருமானங்கள் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வலருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்ப் பகுப்பாய்வு**

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஆட்சேர்ப்பு வருமானம் 827 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததன் காரணமாக உழைத்த வருமானம் ரூபா 166.33 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அது ஒட்டுமொத்த வருமானத்தில் 59 சதவீதமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு வேலை வெற்றிடங்கள் முறையே 2,860 மற்றும் 2,303 எண்ணிக்கையானவை கம்பனிக்கு கிடைத்திருந்தும் அந்த வெற்றிடங்களில் 316 நபர்கள் மற்றும் 663 நபர்கள் மாத்திரம் தொழிலுக்காக வெளிநாடு சென்றிருந்தனர். அது | வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் தொழில் கட்டளைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்படுவது 02 ஆண்டு காலத்திற்காகவாகும். அதற்கிணங்க 2022 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகள் 2024 ஆம் ஆண்டில் | கம்பனிக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு தொழில் கட்டளைகள் காலாவதியாகுவதற்கு வழங்க முன்னர் தொழிலாளர் வெளிநாடு செல்வதற்கு தேவையான முயற்சிகள் எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்த வேலைகளுக்கான வெற்றிடங்களில் முறையே 04 சதவீதம் மற்றும் 28.7 சதவீதம் ஆன குறைந்த அளவினை கொண்டிருந்தது. | இரத்தாகுவதுடன் 2023 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது அங்கீகாரம் 2025 ஆம் ஆண்டுவரை செல்லுபடியாகும். காலத்தை கொண்டுள்ளது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் தொடர்பாக முன்பாக காத்திருப்பவர்கள் வெளிநாடு செல்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளர். | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு தொழில் சந்தையினை மேம்படுத்துவதற்கான வெளிநாட்டு பயணத்திற்காக ரூபா 8,004,000 பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 06 வெளிநாட்டுப் பயணங்களுக்காக ரூபா 12,048,447 செலவு செய்யப்படடிருந்தும் அதாழில் முயற்சி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 228,812 மாத்திரம் செலவு செய்யட்டிருந்தது. எவ்வாறாயினும 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியால் 663 நபர்கள் வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 203 தொழில் வாய்ப்புக்கள் தொழிலாளர்களால் வெளித் தரப்பினர்களினூடாக தேடிக்கொண்ட தொழில் வாய்ப்புக்களாகும். அது வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கையில் 30 சதவீதமாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தொழில் சந்தையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதிய விசேட முன்மொழிவு தொகுப்பின் மூலம் விமான டிக்கட்டுக்களை வழங்கும் பிரிவினை ஆரம்பிப்பதற்காக யாப்பில் திருத்தங்களை மேற்கொண்டு 06 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் கம்பனியால் அதற்காக தேவையான சட்டப் பின்னணியினைத் தயாரிப்பதற்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது எங்கள் தாய் நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் இது தொடர்பாக இரண்டு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். | கம்பனியின் தொழில் முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சட்டப் பின்னணி தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 மே 20 ஆந் திகதி தென் கொரிய நாட்டிற்கு 133 தெழிலாளர்களை அனுப்புவதற்காக தகமைகளைப் பரீட்சிப்பதற்காக ரூபா 1,227,000 செலவு செய்யப்பட்டிருந்தும் அதன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாகியிருந்தது. | இதன் போது தொழிலாளர்களின் தொடக்க செலவாக ரூபா 9,225 தொகை உரிய செயன்முறைப் பரீட்சைக்காக மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தும் எங்கள் நிறுவனத்திலிருந்து பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு அதற்காக பங்குபற்றும் போது வழங்க வேண்டியிருந்த எரிபொருள், உணவு, மேலதிக நேர வேலைப்படி, எழுதுகருவி, முதலிய செலவுகள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் இவ்வாறான தொகையை அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் இப்பணத்தை செலுத்துவதற்கும் தொழிலாளர்கள் இணங்கியுள்ளார்கள். | கம்பனியை தோற்றுவிக்கும் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இஸ்ரேல் நாட்டில் நிர்மாணத் துறைக்கு 100 வேலையாட்களை சேர்த்து கொள்வது தொடர்பாக 2023 திசெம்பர் மாதத்தின் போ பணியகத்திடம் வைக்கப்பட்ட ரூபா 2,000,000 பிணைப் பணம் உரிய ஆட்சேரப்பு கைவிடப்பட்டிருந்தும் அப்பிணைப் பணத்தினை விடுவிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | தற்பொழுது அரசாங்க துறைக்கு மாத்திரம் திறந்துள்ள இஸ்ரேல் நிர்மாண துறையின் தொழில் வாய்ப்புக்களை எதிர்காலத்தில் தனியார் துறைக்கு திறக்கச் செய்யும் குறிக்கோளில் இப்பிணை வைப்புக்களை தொடர்ந்தும் வைத்திருப்பதறகு தீர்மானிக்கப்பட்டது. | உரிய தொழில் வாய்ப்புக்களுக்காக வேலையாட்களை அனுப்புவதற்கு அல்லது உடனடியாக பிணைப் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 யூலை 15 மற்றும் 16 ஆந் திகதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட நடமாடும் தொழில் வர்த்தக கண்காட்சிக்காக கம்பனியால் 05 வர்த்தக நிலையங்களையும் பெயர்ப் பலகைகளையும் கொள்வனவு செய்வது தொடர்பாக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாது 2023 யூலை 08 ஆந் திகதி கம்பனியின் தலைவரின் தனிப்பட்ட பெயருக்கு விலை மனுக்களும் இன்வொயிஸ்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த நிறுவனத்தின் பெயருக்குப் பதிலாக உரிய நிகழ்ச்சித்திட்டத்தின் பெயரான Global fair என்ற பெயரில் ரூபா 2,180,000 தொகையான இரண்டு காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. | எங்கள் நிறுவனத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதாவது இன்வொயிசில் குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயருக்கு என்பதுடன் உரிய நிறுவனத்தின் பிரதிநிதி வருகை தந்து காசோலையை பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்றிருந்தது. இதன் போது வவுச்சரிலுள்ள அந்த நிறுவனத்தின் பிரதி நிதியின் தேசிய அடையாள அட்டையினை பரீட்சித்ததன் பின்னர் அவரின் கையொப்பம் வவுச்சரின் மீது இடப்பட்டதன் பின்னர் காசோலைகள் வழங்கப்பட்டன. | இக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு உரிய நிறுவனத்தின் பெயரில் காசோலைகள் வழங்கப்படாதமைக்கான காரணத்தை பரீட்சித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 சனவரி மாதத்திலிருந்து 2023 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது தென்கொரியாவிற்குச் செல்லுகின்ற வேலையாட்களுக்குத் தேவையான 3767 விமான டிக்கட்டுக்கள் இலங்கை விமான சேவைகள் கம்பனியின் மூலம் நேரடியாக கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டிருந்தும் தனிப்பட்ட முகவர்களினூடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த டிக்கட்டுக்களுக்காக அக்கம்பனியின் விலையினை விட ரூபா 3,000 இலிருந்து ரூபா 72,000 வரையான வீச்சிலான அதிக விலைக்கு கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 122,560,967 தொகை வேலையாட்களிடமிருந்தும் மிகையாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. இவற்றில் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவராண்மையும் 04 தனிப்பட்ட முகவர் நிறுவனங்களும் முறையே ரூபா 27,786,521 மற்றும் ரூபா 94,774,446 தொகைகளை இலாபமாக உழைத்திருந்தன. | 2023-06-16 ஆந் திகதியிலிருந்து திணைக்கள பெறுகை குழுவிற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (இறுதி அங்கீகாரம்) செயற்படுவார். அதற்கிணங்க இந்த அவதானிப்பு பிழையாகும். இந்த அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் TEC மற்றும் DPC அங்கீகாரத்தினைப் பெற்றே மேற்கொள்ளப்பட்டன. உரிய 10 நிறுவனங்களுக்கு மேலதிகமாக சிறீலங்கா விமான சேவைகள் கம்பனியிடம் விலை மனுக்கள் கோரப்பட்ட போதிலும் அந்த நிறுவனம் பதில் வழங்கியிருக்கவில்லை. | இலங்கை விமான சேவைகள் கம்பனியிடமிருந்து விமான டிக்கட்டுக்களை நேரடியாக கொள்வனவு செய்வதற்கு கம்பனிக்கு வாய்ப்புக் காணப்பட்டிருந்தும் தனியார் முகவர் நிறுவனங்களினூடாக கொள்வனவு செய்தல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு மிகையாக அறவிடப்பட்ட தொகையை வேலையாட்களுக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 51/2022 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனி ஒரு விமான டிக்கட்டுக்காக 1 சதவீதத்திற்கும் 7 சதவீதத்திற்கும் இடைப்பட்ட உச்ச அளவு இலாபத்தினை வைத்து டிக்கட்டுக்களை வழங்குதல் வேண்டும். எனினும் 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை விமான சேவைகள் கம்பனியின் விலைகளை விட அதிக விலைகளின் கீழ் தனியார் முகவர் நிறுவனங்களினூடாக விமான டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக கம்பனிக்கு முன்னைய ஆண்டில் உழைத்த இலாபம் 5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததன் காரணமாக ரூபா 27,095,464 இலாபம் கம்பனியால் இழக்கப்பட்டிருந்தது. | இலங்கை விமான சேவைகள் கம்பனியின் இணையதளத்தின் மூலம் தனிப்பட்ட நபர்களுக்கு விமான டிக்கட்டுக்களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்த போதிலும் பெரிய குழுக்களுக்கு அது நடைமுறைச் சாத்தியமற்றதுடன் விலை நிர்ணய முறைமைக்குப் புறம்பாக சிறீலங்கன் விமான சேவைகள் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு விசேட அமைச்சரவை அங்கீகாரம் அல்லது சுற்றறிக்கை ஏற்பாட்டு அங்கீகாரம் இருக்கவில்லை. | கம்பனியால் சிறீலங்கன் விமான சேவை கமபனியிடமிருந்து நேரடியாக டிக்கட்டுக்களை கொள்வனவு செய்து 5 சதவீத இலாபத்தினை உழைக்கும் நடைமுறை முன்னைய சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனிக்கு மிகவும் சாதகமான வகையில் தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும். . |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயல் நடவடிக்கை கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காளய்வாளர் தலைமை அபிவிருத்திக்குச் சமர்க்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 80 நாட்கள் தாமதித்து அதாவது 2023 மே 21 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2023.02.28 ஆந் திகதி அளவில் நிதிக்கூற்றுக்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்கு வழங்கப்பட்டிருந்ததாலும் அந்த அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் முடிவடைந்திருக்காததனாலும் தாமதித்து நிதிக்கூற்றுக்களை ஒப்படைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிதிக்கூற்றுநுக்களை சமர்ப்பிக்க வேண்டும். |